குறுந்திரைப்பட போட்டி

# அது திரைக்கதையுடன் ஆரம்பமாகிறது

ட்ரான்ஸ்பேரன்சி இனரர்நஷனல் ஸ்ரீலங்கா நிறுவனம் குறந்திரைப்பட போட்டியொன்றை நடத்த திட்டமிட்டுள்ளது. அதில் பங்குபற்ற விரும்புபவர்கள் ஊழல் ஒழிப்பு தொடர்பான மூன்று தலைப்புகளின் கீழ் திரைக்கதைகளை அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். திரைப்படத்துறையில் தேர்ச்சி பெற்ற சிலரை உள்ளடக்கிய நடுவர் குழத்தினால் திரைக்கதைகள் தெரிவுசெய்யப்பட்டு வெற்றிபெறும் திரைக்கதையை இயக்குவதற்கும், பொதுமக்கள் கண்டுக்கழிப்பதற்கும் வாய்ப்பு அளிக்கப்படவுள்ளது. TISL உள்நாட்டு திரைப்படத்துறையில் திறமை உள்ளவர்களை மேலும் ஊக்குவிப்பதற்கும், இலஞ்சம் மற்றும் ஊழலுக்கு எதிராக போராட வேண்டும் என்ற செய்தியை திரைப்படத்துறை ஊடாக சமூகமயப் படுத்துவதற்கும் எதிர்பார்க்கின்றது.

ஒவ்வொரு தலைப்பின் கீழும் வெற்றிபெறும் ஒரு திரைக்கதை மட்டும் இயக்குவதற்காக தெரிவுசெய்யப்படும். போட்டியில் கலந்து கொள்ளும் விண்ணப்பதாரி ஒருவரால் ஒரு திரைக்கதையை மட்டுமே சமர்ப்பிக்க முடியும். திரைக்கதையின் மூலப் பிரதியை சமர்ப்பித்த பின்னர் தயாரிக்கப்படும் குறும் பட்டியலில் இடம்பெறும் விண்ணப்பதாரிகள் இலஞ்சம் மற்றும் ஊழல் ஒழிப்பு பொறிமுறை தொடர்பில் நடத்தப்படுகின்ற பயிலமர்வுக்காக அழைக்கப்படுவார். அச்செயலமர்வின்போது திரைப்படத்துறையில் தேர்ச்சி பெற்ற சிலர் தங்களுடைய அனுபவங்களை பங்குபற்றுவோருடன் பகிர்ந்துகொள்ள உள்ளனர்.

ட்ரான்ஸ்பேரன்சி இனரர்நஷனல் ஸ்ரீலங்கா ஊழல் ஒழிப்புக்காக உலக அளவில் செயல்படுகின்ற முன்னோடி நிறுவனமான ட்ரான்ஸ்பேரன்சி இனரர்நஷனல் நிறுவனத்தின் இலங்கை கிளையாகும். ட்ரான்ஸ்பேரன்சி இனரர்நஷனல் நிறுவனம் இலஞ்சம் மற்றும் ஊழலினால் ஏற்படும் பாதிப்புகள் தொடர்பில் விழிப்புணர்வுகளை செய்து வருவதுடன் அவற்றை கட்டுப்படுத்துவதற்கான உறுதியான செயற்பாடுகளை மேம்படுத்துவதற்கும், நடைமுறைப்படுத்துவதற்கும் அரச தரப்பு, வர்த்தகத் துறையினர் மற்றும் சிவில் சமூகத்துடன் இணைந்து செயலாற்றுகிறது.

**திரைக்கதைக்குரிய தலைப்புகள்**

திரைக்கதைகள் பின்வரும் தலைப்புகளின் கீழ் எழுதப்பட வேண்டும்.

1. **இலஞ்சம் மற்றும் ஊழல் ஒழிப்பில் இளந் தலைமுறையினரின் வகிபங்கு**

   ஒரு நாட்டில் இலஞ்சம் மற்றும் ஊழலுக்கு எதிராக செயற்படும்போது இளந் தலைமுறையினரிடம் கைவிட முடியாத பொறுப்பு ஒப்படைக்கப்படுகின்றது. 2018 குலோபள் கரப்ஷன் பறோமீற்றர் ஆய்வின்படி, இலஞ்சம் மற்றும் ஊழல், நாட்டின் ஆளுகையில் காணப்படுகின்ற பிரதானமான பிரச்சினை என்பதை இலங்கையிலுள்ள இளந் தலைமுறையினரில் 80 சதவீதமானோர் கண்டுடறிந்துள்ளனர். இந்த தலைப்பின் கீழ் சமர்ப்பிக்கப்படுகின்றன திரைக்கதைகளில், இலஞ்சம் மற்றும் ஊழலுக்கு எதிராக இளம் தலைமுறையினர் துடிப்புடன் போராடவேண்டிய பல்வேறு ஊடகங்கள் உதாரணமாக தகவல் அறியும் உரிமைச் சட்டத்தை பயன்படுத்துதல், விழிப்புணர்வு

செய்யும் பொருட்டு சமூக ஊடகங்களை பயன்படுத்துதல், இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்யும் ஆணைக்குழுவுடன் இணைந்து செயற்படுதல் போன்ற விடயங்கள் தொடர்பாக கவனம் செலுத்த வேண்டும்.

**2. இலஞ்சம் மற்றும் ஊழல் பெண்களில் அசாதாரணமான முறையில் ஏற்படுத்தும் தாக்கம்**

இலஞ்சமும் ஊழலும் பல்வேறு சமூகக் குழுக்களில் பல்வேறு விதமான தாக்கத்தினைச் செலுத்துகின்றது. இவ்வாறான சமநிலையற்ற தாக்கங்களை உரிய முறையில் இனங்காணுதல் அவற்றை தீர்ப்பதற்கான மிகச் சிறந்த வழியாகும். பெண்கள் இலஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பான நிலைமைகளை எதிர்கொள்ளும்போது அவர்களின் அனுபவங்கள் உதாரணமாக பாலியல் இலஞ்சம், பெண்கள் அரசியலில் துடிப்புடன் இயங்கும்போது எதிர்கொள்ளும் பிரச்சனைகள் மற்றும் பொதுவான சேவைகளைப் பெற்றுக் கொள்ளும்போது எதிர்கொள்ளும் பிரச்சனைகள் போன்ற அனுபவங்கள் இந்த தலைப்பின் கீழ் திரைக்கதையாக வடிவம் பெற வேண்டும்.

**3. பாரிய அளவிலான ஊழல் மோசடிகள்**

உயர் அதிகாரிகளும் அரசியல்வாதிகளும் பல மில்லியன் ரூபாய்களை நாட்டுக்கு இழக்கச் செய்தல் / மோசடி செய்தல் இத்தலைப்பின் கீழ் விபரிக்கப்படுகிறது. இவ்வாறான குற்றச் செயல்கள் பெரும்பாலும் சட்டத்தின் பிடியில் சிக்குவதில்லை என்பதுடன் குற்றவாளிகள் ஒருபோதும் தண்டிக்கப்படுவதுமில்லை. இவ்வாறாக பல மில்லியன் ரூபாய்களில் புரியப்படுகின்ற ஊழல் மோசடிகள் காரணமாக நாட்டு மக்களுக்கு ஏற்படுகின்ற பாதிப்புகள் மற்றும் இவ்வாறான மோசடிகளை சட்டத்தின் முன் கொண்டு வருவதற்கு பல தரப்பினரும் கொண்டுள்ள பொறுப்புக்கள் இந்த தலைப்பின் கீழ் உள்ளடக்கப்பட வேண்டும்.

**நன்மைகள்**

- திரைப்படத்துறையிலுள்ள தேர்ச்சி பெற்றவர்களுடன் செயற்பாட்டு பயிலமர்வில் பங்கேற்கும் வாய்ப்பு.
- வெற்றிபெறும் போட்டியாளர்களுக்கு தமது திரைக்கதையை இயக்குவதற்கும் தயாரிப்பதற்கும் கிடைக்கும் அனுசரணை.
- வெற்றி பெறுகின்ற குறுந்திரைப்படம் பொதுமக்கள் கண்டு கழிப்பதற்காக திரையிடப்படுதல்.

**இதற்கான அறிவுறுத்தல்களும் அளவுகோல்களும்**

- ✓ திரைக்கதையை சிங்களம், தமிழ் அல்லது ஆங்கில மொழி மூலம் சமர்பிக்கலாம்.
- ✓ திரைக்கதையின் முதற் பக்கத்தில் படைப்பின் பெயரை மட்டும் குறிப்பிட வேண்டும் என்பதுடன் வசனகர்த்தாவின் பெயர் உட்பட எந்த ஒரு விபரத்தையும் குறிப்பிடக்கூடாது.
- ✓ விண்ணப்பதாரிகள் 35 வயதிற்கு மேற்படாதவர்களாக இருக்க வேண்டும்.
- ✓ சமர்ப்பிக்கப்படும் திரைக்கதைகள் எழுத்தாளர் / எழுத்தாளர்களின் படைப்பாக மட்டுமே இருத்தல் வேண்டும்.

- ✓ திரைக்கதைகள் PDF வடிவில் "குறுந் திரைப்பட போட்டி" எனக் குறிப்பிடப்பட்டு தரப்பட்டுள்ள மின்னஞ்சல் முகவரிக்கு (tisl@tisrilanka.org) குறிப்பிடப்பட்டுள்ள திகதியில் அல்லது அதற்கு முன்னர் அனுப்பப்படுதல் வேண்டும்.
- ✓ விண்ணப்பதாரியுடன் தொடர்பு கொள்ள முடியுமான தகவல்கள் (தொலைபேசி இலக்கம் / முகவரி மற்றும் ஏனைய தகவல்கள்) மின்னஞ்சலில் குறிப்பிடப்பட வேண்டும்

**மதிப்பீடு**

சமர்ப்பிக்கப்பட்டுள்ள திரைக்கதைகள் கீழே தரப்பட்டுள்ள அளவுகோல்களை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீடு செய்யப்படும்.

1. எண்ணக்கரு
2. அனுபவம்
3. பாத்திரங்கள்
4. உரையாடல்கள்
5. கட்டமைப்பு

முதலாவது சுற்றில் தெரிவுசெய்யப்பட்டு தயாரிக்கப்படும் குறும் பட்டியலில் இடபெறும் விண்ணப்பதாரிகள் செயற்பாட்டு பயிலமர்வொன்றில் பங்கேற்க சந்தர்ப்பம் வழங்கப்படும்.

தலைப்பு ஒன்றின்கீழ் தல ஒரு திரைக்கதை வீதம் மூன்று தலைப்புகளின் கீழ் மூன்று திரைக்கதைகள் தெரிவுசெய்யப்படும்.

**கால வரம்பு**

விண்ணப்பத் திகதி - ஒக்டோபர் 16

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி - ஒக்டோபர் 30

இலஞ்சம், ஊழல் ஒழிப்பு மற்றும் திரைப்பட உருவாக்கம் தொடர்பான செயற்பாட்டு பயிலமர்வு நடைபெறும் திகதி - நவம்பர் 07

வெற்றியாளர் அறிவிக்கப்படும் திகதி - நவம்பர் 22

வெற்றி பெற்ற திரைக்கதை திரையிடப்படும் திகதி - 2020 ஜனவரி 13

**மேலதிக விபரங்களுக்கு**

விண்ணப்பித்தல் தொடர்பான மேலதிக விபரங்களை தெரிந்துகொள்ள 0713018596 என்ற தொலைபேசி இலக்கம் அல்லது zaahid@tisrilanka.org என்னும் மின்னஞ்சல் முகவரி மூலம் சாஹித் ஆஹமனைத் தொடர்பு கொள்ளவும்